Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 02 [18-09-1993] சனிக்கிழமை ஓசை 212

## தியாகி திலீபன் வரலாற்று கண்காட்சி நல்லூரில் திறப்பு

தியாகி லெப். கேணல் திலீபனின் வரலாற்றை சித்திரிக்கும் கண்காட்சியொன்று நேற்று நல்லூர்க்கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இக் கண்காட்சியில் தியாகி திலீபன் தொடர்பான பல ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ளன. இக் கண்காட்சியை திறந்துவைத்து யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி உரையாற்றுகையில்; "இன்று தியாகி லெப். கேணல் திலீபன் அண்ணா அவர்களின் வரலாற்று கண்காட்சியை திறந்துவைத்துள்ளோம். திலீபன் அண்ணாவின் வரலாற்றை சித்திரிக்கும் பல்வேறு ஆவணங்களை கொண்டு இக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. உங்களிடமும் திலீபன் அண்ணாவின் பல ஆவணங்கள் இருக்கலாம் (4ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகளுக்கு எதிராகப் போராட புதிய கடற்படை அணி உருவாக்கம்!

## பீரங்கிப்படகு தாக்குதல்

(குருநகர்)

மண்டைதீவுக்கு அப்பால் கடல் பிரதேசத்துள் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் திடீரென வந்து சேர்ந்த பீரங்கிக் கப்பலில் இருந்து கரையோரங்களை நோக்கி டொங்கான் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அந்நேரம் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் தாக்குதலை அடுத்து தொழிலை இடைநிறுத்திக் கரை வந்து சேர்ந்ததால் உயிர்சேதங்கள் எதுவும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது. (21)

## 'கடற் சிங்கங்களின்' படைப்பிரிவு இராணுவத்தின் கீழ் செயற்படுமாம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு கடற் பகுதிகளில் கடற் புலிகளுக்கு எதிராக புதிய கடற்படை அணி ஒன்று அமைக்கப்படும் என சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா தெரிவித்தார். இக் கடற்படைப் பிரிவிற்கு 'கடற் சிங்கங்கள்' எனப் பெயரிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

கடந்த 13 ஆம் திகதி புத்தளம், கற்பிட்டி பகுதிகளுக்கு வருகை தந்தபோது, பொது மக்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என 'லங்காதீப' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது ஆழ் கடலில் தொழில் செய்யப் பழக்கப்பட்ட மீனவர்களைத் திரட்டி இவர்களுக்கு பூரண இராணுவப் பயிற்சியளிக்கப்பட்டு 'கடற் சிங்கங்கள்' படையணி உருவாக்கப்படும். இப்படையணியை ஈடுபடுத்துவதன் மூலம் கடற்புலிகள் பற்றிய தகவல்கள், கடலில் அவர்களின் நடமாட்டம் போக்குவரத்து பாதைகள் பற்றிய விபரங்கள் பாதுகாப்புப் படையினர் பெற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ் அணி இராணுவத்தினருக்குக் கீழ் செயற்படும் என்றும். புதிய அணிக்கு சீருடைகள் வழங்குதல், சம்பளம் மற்றும் மேலதிகப்படி வழங்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் கடற்புலிகளின் தாக்குதல் நடவடிக்கையை சமாளிக்கவே சிறிலங்கா இராணுவம் இப்புதிய படையணியை உருவாக்க முனைந்திருப்பதாக 'லங்காதீப' மேலும் தெரிவித்துள்ளது

கடற் புலிகளின் கரும்புலித் தாக்குதலினால் பீதியடைந்துள்ள சிறிலங்கா கடற்படையினர் மனோ வலிமையை அதிகரிக்கச் செய்யவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என கருதப்படுகிறது என்று அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவுடன் மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்த, பிரிகேடியர் கருணா திலக ஆகியோர் கடந்த 13 (4ஆம் பக்கம் பார்க்க)

## நறுவிலிக்குளத்தில் ஒருவர் மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில் வீதித்திருத்தவேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில்சிக்கியதில் தனது காலொன்றை இழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தின்போது காலை இழந்தவர் நறுவிலிக்குளத்தைச்சேர்ந்த அந்திரேஸ் சந்தியோகு (வயது 24) என்னும் இளம் குடும்பஸ்தா... அடிப்படையில் திருத்தி அமைக்கும்வேலையைபொறுப்பேற்று செய்துவரும் போதே வீதிக்கு அருகில் சென்ற சமயம் மிதிவெடியில் சிக்கி மேற்படி நபர் காலைஇழக்க நேர்ந்தது. (சி)



தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு நாட்களை முன்னிட்டு அவரின் உருவப்படத்தினை அலங்கார ஊர்தியில் வைத்து மக்கள் இழுத்து வருவதை படத்தில் காணலாம்.

## இனப்பிரச்சினை தீர்வுகாண உதவின்

## திலீபன் நினைவு ஊர்திகள்

வருகை தந்தபோது, பொது மக்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என 'லங்காதீப' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அங்கு அவர் தொடர்ந்து பழக்கப்பட்ட மீனவர்களைத் திரட்டி இவர்களுக்கு பூரண இராணுவப் பயிற்சியளிக்கப்பட்டு 'கடற் சிங்கங்கள்' படையணி உருவாக்கப்படும். இப்படையணியை ஈடுபடுத்த அவர்களின் நடமாட்டம் போக்குவரத்து பாதைகள் பற்றிய விபரங்கள் பாதுகாப்புப் படையினர் பெற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ் அணி இராணுவத்தினருக்குக் கீழ் செயற்படும் என்றும், புதிய அணிக்கு சீருடைகள் வழங்குதல், சம்பளம் மற்றும் மேலதிகப்படி வழங்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் கடற் புலிகளின் தாக்குதல் நடவடிக்கையை சமாளிக்கவே சிறிலங்கா இராணுவம் இப்புதிய தீ' மேலும் தெரிவித்துள்ளது

கடற் புலிகளின் கரும்புலித் தாக்குதலினால் பீதியடைந்துள்ள சிறிலங்கா கடற்படையினர் மனோ வலிமையை அதிகரிக்கச் செய்யவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என கருதப்படுகிறது என்று அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவுடன் மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்த, பிரிகேடியர் கருணாதிலக ஆகியோர் கடந்த 13

(4ஆம் பக்கம் பார்க்க)

# நறுவிலிக்குளத்தில் ஒருவர் மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில் வீதித்திருத்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கியதில் தனது காலொன்றை இழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தின்போது காலை இழந்தவர் நறுவிலிக்குளத்தைச்சேர்ந்த அந்திரேஸ் சந்தியோகு (வயது 24) என்னும் இளம் குடும்பஸ்தராவார்.

சிறிலங்கா இராணுவத்தினர் முன்னர் இப்பகுதியில் நிலைகொண்டிருந்து பின்பு அப்பிரதேசத்தை விட்டு வெளியேறியமை தெரிந்ததே. இப் பிரதேசத்தை விட்டு இராணுவத்தினர் வெளியேறிச் செல்லுமுன்னர் அப்பிரதேசத்திலுள்ள வீடுகள் அனைத்தையும் தகர்த்து விட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேசத்தில் பழுதடைந்த வீதிகளை ஒப்பந்த அடிப்படையில் திருத்தியமைக்கும்வேலையைபொறுப்பேற்று செய்துவரும் போதே வீதிக்கு அருகில் சென்ற சமயம் மிதிவெடியில் சிக்கி மேற்படி நபர் காலைஇழக்க நேர்ந்தது.

(சி)

# இனப்பிரச்சினைதீர்வுகாண உதவின் எந்தப்பேயுக்கும் இடமளிக்கலாம்

## ராஜாங்க அமைச்சர் ரணசிங்க

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு மந்திரிசபை உறுப்பினராக இருக்கும் வீரசிங்க மல்லிமாராச்சியும் தயாராக உள்ளார். வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவர் முன்வருகிறார்களோ அவர்களை நாம் ஆதரித்தே தீரவேண்டும்.

இவ்வாறு தகவல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்க கூறியுள்ளார். தென்பகுதி விகாரை ஒன்றில் இடம்பெற்ற கூட்டத்தின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பிரச்சினையைத் தீர்க்க முடியுமாயின் எந்தப் பேயாக இருந்தாலும் நாம் இடமளிக்க வேண்டும். யாழ்ப்பாணம் சென்று பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நாம் இடமளிக்க வேண்டும் என்று அவர் அங்கு தெரிவித்தார்.

# கல்குடா வாகரைப் பகுதியில் சிங்கள மீனவர் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

கல்குடா, வாகரைப் பிரதேசங்களில் சிங்கள மீனவர்களை குடியேற்றி நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதற்கென பன்னிரெண்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், பதினேழு லட்சம்ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது ஒவ்வொன்றும் தலா முப்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய நூற்றி இருபது தோணிகள் விநியோகிக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஆறு தமிழ் இளைஞர் கண்டியில் கைது

[கொழும்பு]

வத்தளையைச் சேர்ந்த ஆறு தமிழ் இளைஞர், யுவதிகள் கண்டியில் வைத்து கைதாகினர்.

கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து வாகனம் ஒன்றில கண்டியை நோக்கி பயணம் செய்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

கண்டியில் வாகனசோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசாரே இவர்களை கைதுசெய்துள்ளனர்.

ஜூனிலிருந்து சேவையிலிருப்போருக்கு

# பட்டதாரி சம்பளம் வழங்க கல்வி அமைச்சு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1.6 93 இல் இருந்து சேவையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய கல்வியமைச்சு மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

இதற்கான விபரங்கள் அடங்கிய சுற்று நிருபங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களிற்கு கிடைக்கப் பெற்றுள்ள தாக வேலணைக் கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் பட்டதாரி ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டு ஓர் ஆண்டை பூர்த்தி செய்து கொண்ட ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் வழங்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(பா)

# விடுவிக்க உதவுமாறு யுத்தக் கைதிகள் கடிதம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உள்ள சிங்கள யுத்தக் கைதிகள் தம்மைவிடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி மீண்டும் சிறிலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாம் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப் பட்டிருப்பதாகவும் தமது விடுதலை தொடர்பாக இருந்த நம்பிக்கையை இழந்து விட்டதாகவும் யுத்தக் கைதிகள் தெரிவித்துள்ளனர். தமதுவிடுதலைக்கு தமதுபெற்

[4ஆம் பக்கம் பார்க்க]

# மண்டைதீவு முகாமிலிருந்து ஷெல் வீச்சு; துப்பாக்கி சூடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து யாழ். நகரப்பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதலும் துப்பாக்கிச் சூடும் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு 8.30 மணி முதல் சுமார் ஒருமணி நேரமாக தொடர்ச்சியாக இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலினால் ஒருவர் சிறுகாயத்துக்குள்ளாகினார். அத்துடன் கொட்டடி மற்றும் கோணாந்தோட்டம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் யாழ். நகரமத்திய பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்று தங்கியிருந்தனர்.

# துப்பாக்கிச்சூட்டு காயம்

நேற்றுமதியம் 2 30மணியளவில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கையில் காயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் நாகலிங்கம் அன்ரன்ராஜ் (வயது24) என்பவராவார்.

(ஐ)



தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு நாட்களை முன்னிட்டு அவரின் உருவப்படத்தினை அலங்கார ஊர்தியில் வைத்து மக்கள் இழுத்து வருவதை படத்தில் காணலாம்.

# திலீபன் நினைவு ஊர்திகள் நேற்று நகரில் பவனி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம்ஆண்டு நினைவு நாட்களையொட்டி நேற்றும் பெருந்திரளான மக்கள் திலீபனின் உருவப்படங்களுக்கு தமது இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்தினர்.

யாழ். குடாநாட்டில் நகரப் புறங்களில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும், புறநகர்ப்பகுதிகளிலும் தியாகி திலீபனின் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்ட விசேட நினைவுப்பந்தல்களில் வைக்கப்பட்டு மலர்கள் தூவப்பட்டும், மலர்மாலைகள் சூட்டியும் பெருந்திரளான மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் குடாநாட்டில் வட்டப்பிரிவு ரீதியாக அடையாள உண்ணாவிரதங்களும், சிரமதான வைபவங்களும் நடைபெற்று வருகின்றன. இந் நிகழ்வுகளில் அதிகளவு மக்கள் கலந்துகொண்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றைவிட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தையும், தியாகத்தையும் நினைவுகூரும் வகையில் கரகாட்டம் மற்றும் காவடியாட்டம், ஊர்தி பவனி ஆகியவை இடம்பெற்று வருகின்றன. யாழ். மாவட்ட மாவீரர் பணிமனையில் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தைச் சித்தரிக்கும் படக்காட்சி காண்பிக்கப்பட்டு வருகிறது.

வடமராட்சியில் மட்டும் பத்துக்கு மேற்பட்ட பந்தல்களில் உண்ணா நோன்பு தினமும் நடைபெற்று வருகிறது.

வடமராட்சி வடக்கு - கிழக்கு கடற்புலிகள் பிரதேசம் உள்ளடங்கலாக மேற்குறித்த பந்தல்கள் அமைக்கப்பட்டிருப்பது அவதானிக்க முடிகிறது.

பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி வட்டங்கள் அமைத்துள்ள பிரதான பந்தல்களில் நூற்றுக்கணக்கான மக்கள், பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் பலரும் இந் நோன்பில் கலந்து கொண்டுள்ளனர் பாடசாலை மாணவர்கள் தியாகி திலீபனின் படங்

[4ஆம் பக்கம் பார்க்க]

# தியாகி திலீபன் நினைவாக சிரமதானம், உண்ணாவிரதம்

தியாகி லெப்டினன்ட்கேணல் திலீபன் நினைவு உண்ணாவிரதங்கள் நாளை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

சங்கானை வட்டம், சங்கானை அரசடி வைரவர் கோவில் முன்றலில், சங்கானை பிரதேச வர்த்தகர் சங்கம்; கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் கோயில் முன்றலில், புத்தூர் சிற்றூர் மக்கள், சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றல் மானிப்பாய் வர்த்தக சங்க ஊழியர், உடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகள் பிரதேசத்தில் உண்ணாவிரத நிகழ்வுகள்

கடற்புலிகள் பிரதேசத்தில் தியாகிதிலீபன் நினைவு அடையாள உண்ணாவிரதங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வடமராட்சி வடக்கில் இன்று இன்பருட்டி விளையாட்டு மைதானம், நாளை சக்கோட்டை கோயில், 20ஆம் திகதி பொலிகண்டிச்சந்தி, 21ஆம் திகதி வல்வெட்டித்துறைச் சந்தி, 22ஆம்திகதி ஆதிகோவிலடி, 23ஆம் திகதி காட்டுப் புலம், 24ஆம் திகதி தொண்டமனாறு; வடமராட்சி கிழக்கில் இன்று தாளையடி ராஜன் நகர், நாளை மருதங்கேணி, 20ஆம் திகதி உடுத்துறை, வத்திராயன், 21ஆம் திகதி குடாரப்பு முகாம் செம்பியன் பற்று, 22ஆம் திகதி நயினாமுனை, நெல்லியான், 23ஆம் திகதி மாமுனை, குடாரப்பு, 24ஆம் திகதி நாகர் கோயில் அம்பன், 25ஆம் திகதி மணற்காடு குடத்தனை. வலிகாமம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

"எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப் போல்தான் நாளை எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும்; வருத்தப்படும்."

-திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(சி/7435)

## வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

யாழ் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதான பொறியியலாளராகி, அ. யோகராசா அவர்களுக்கு வழங்கப்பட்ட சாரோலை குருநகர் தொடர்மாடிக் கட்டடத்திற்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பிரதான பொறியியலாளரிடமோ அல்லது க. பாலச்சந்திரன் 35 கச்சேரி நல்லூர் வீதியிலோ ஒப்படைக்கவும்.
(6050)

**கருத்தரங்கு ஒத்திவைப்பு**

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்ட ரீதியாக இன்று 18-ம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த கருத்தரங்கு 23-ம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
(30)

**வினைத்திறமை காண் தடைப் பரீட்சை**

[யாழ்ப்பாணம்]

மத்திய அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க பொது எழுதுநர் சேவையின் 11-ம் வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை இன்று சனிக்கிழமை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதோர் பரீட்சை நிலையத்தில் அவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

**கோழித்தீன் தயாரிப்பு பரீட்சார்த்த முயற்சி**

முல்லைத்தீவு மாவட்டத்திலே பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்டு வரும் கோழித்தீனை இங்குள்ளவர்கள் கோழி வளர்ப்பிற்குப் பயன்படுத்தி வருவதாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அண்மைக் காலங்களில் கோழித்தீனுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதாக இம்முயற்சி அமைந்துள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திலே கோழித்தீன் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் மீன்தூள், சிப்பித்தூள், தவிடு அரிசிக்குறுணல் போன்றன போதியளவு கிடைக்கக் கூடியதாக இருந்தும் சோளம், இறு

## மூன்றாண்டுகளின் பின்னர் ஐஸ்கட்டிகள் உற்பத்தி

யாழ் நகரில் மூன்று வருடகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஐஸ்கட்டியினை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழில் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

நவீன தொழில்நுட்பம் ஒன்றின் அடிப்படையில் ஆரியகுளம் சந்தியிலே அமைந்திருக்கும் உதயம் பல்பொருள் அங்காடிக் கட்டடத் தொகுதியிலே இந்த உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் ஐஸ் இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்த கடற்றொழிலாளர்கள் இந்த உற்பத்தி மூலம் மிகுந்த பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. மக்கள் தமது தேவைக்கான ஐஸினை இங்கு பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## முக்கிய கலந்துரையாடல்


யாழ் நகர் சகலதுறை வர்த்தகர்களுக்குமான ஓர் முக்கிய கலந்துரையாடல் 20-09-93 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறும். யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர், மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள். சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகல துறை வர்த்தகர்களும் கண்டிப்பாக கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் சங்கத்தின் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம.

நன்றி - வணக்கம்

இங்ஙனம்
பொதுச் செயலாளர்
யாழ். வர்த்தகர் சங்கம்.

(5953)

## அனித்தா பாடசாலையின்



## பொருட்காட்சி

- ஆடை தயாரிப்பு
- சமையற் கலை
- உள்ளக அலங்கரிப்பு
- சிகை அலங்காரம்
- கேக் தயாரிப்பு
- மணமகள் அலங்கரிப்பு

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

**கோபிநாத் / காண்டீபன்**

வேலுப்பிள்ளை புஸ்பராசா [தேவன்]

4ஆம் வட்டாரம், நெடுந்தீவு

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 1974-08-28 | 1991-08-11 |

திதி:- 1993-09-18

முல்லை மாநிலத்தில் முத்தாகப் பிறந்தாயே
முற்றையன் கட்டினிலே முல்லைபோல் வளர்ந்தாயே
தமிழீழ வீறு கொண்டு புலியாகப் பாய்ந்தாயே
அம்மண்ணின் எல்லைதனில் உன்னுயிரை விதைத்தாயே

உடுவில் தெற்கு,
சுன்னாகம். (6049)
-குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
27 - 10 - 1971

தாயக மண்ணில்:
18 9 - 1992

**2ஆம் லெப். தேவானந்தி**

(சுப்பிரமணியம் தேவராணி)

(கீரிமலை)

உன் தியாகம்
மண்ணை மகிமைப்படுத்துகிறது
உன் ஞாபகம்
காலத்தால் அழியாதது,

இன்று இரவு இல்லத்தில் நடைபெறும் மதிய

## விவசாயக் கடன் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 1993/94 காலபோக விவசாயக்கடன் சம்பந்தமான முதலாவது கூட்டம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மக்கள் வங்கி சுன்னாகம் கிளையிடம் 83 விவசாயிகளுக்கு நெற்செய்கைக் கடன் வழங்குமாறு கோரி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்திற்கு அமைய கடன் மேற்பார்வை குழுவொன்றும் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் விவசாயப் பகுதி உத்தியோகத்தர்கள், சமநல சேவை உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள் உள்ளூர் விவசாயக்குழு பிரதிநிதிகள் ஆகியோர் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இக்குழு இரண்டு கிழமைக்கு ஒருமுறை அல்லது ஒவ்வொரு மாதமும் மேற்படி திட்டத்தின் செயல்பாடு பற்றி பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த மக்கள்வங்கி யாழ் பிரதேச முகாமையாளர் திரு. இ. அருணானந்தன், உதவிப்பிரதேச முகாமையாளர், சுன்னாகம் கிளை முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் இக்கடன் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பற்றி அங்கத்தினர்களுக்கு விரிவாக விளக்கிக் கூறினார்கள்.

இக்கூட்டத்தின் இறுதியில் அடுத்த கட்டமாக விவசாயிகளை நேரில் சந்திப்பதெனவும் விவசாயிகளின் நிலைகளை நேரில் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதெனவும், முதல் கட்ட கடன்களை இரு கிழமைகளுக்குள் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம்**

தராதரப் பத்திரமற்ற ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டு நீர்கொழும்பு, போலவலான 'செல்ற்' நிறுவனத்தில் பயிற்சிக்கு சமூகமளிக்க வேண்டியவர்களுக்குரிய கடிதங்கள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்று யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

**சத்திரசிகிச்சை நிபுணர் வருகை**

(நெல்லியடி)

பிரெஞ்சு வைத்தியக் குழுவில் பணிபுரிய அமெரிக்காவிலிருந்து, சத்திரசிகிச்சை நிபுணரான டாக்டர் ஜோன் கடந்த வாரம் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தார். (30)

**உலங்குவானூர்தி நோட்டம்**

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியை சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று இரண்டு தினங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டன.

நேற்றும் நேற்று முன்தினமும் பகல் இப்பகுதிக்கு வந்த இவ் விமானம் கடல்பகுதியையும், மக்கள் குடியிருப்புப் பகுதிகளையும்பரவலாக வட்டமிட்டு நோட்டமிட்டது.

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-18

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் இந்திய அரசிடம் 05 கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்த லெப். கேணல் திலீபனுக்கு ஆதரவாக மறியற் போராட்டத்தினை மேற்கொண்ட பொதுமக்கள் மீது திருமலை - அநுராதபுர சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்

1989ஆம் ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப் வன்னிபாபு** [உருத்திரகணேசன் சிறீரங்கன் - புலோலி தெற்கு, பருத்தித்துறை - யாழ்]

**ஜீவன்** [ஜயாமுத்து உதயகுமார் - உடுத்துறை, தாளையடி - வடமராட்சி கிழக்கு]

பருத்தித்துறை - புற்றாளைப் பகுதியில் இந்தியப்

கப்பட்டுவரும் கோழித் தீனை இங்குள்ளவர்கள் கோழி வளர்ப்பிற்குப் பயன்படுத்தி வருவதாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அண்மைக் காலங்களில் கோழித்தீனுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதாக இம்முயற்சி அமைந்துள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திலே கோழித்தீன் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் மீன்தூள், சிப்பித்தூள், தவிடு அரிசிக்குறுணல் போன்றன போதியளவு இடைக்கக் கூடியதாக இருந்தும் சோளம், இறுங்கு போன்ற தானிய வகைகள் போதியளவு கிடைக்காத காரணத்தினால் தொடர்ந்து உற்பத்தியினை மேற்கொள்ள முடியாதுள்ளது எனவும், தொடர்ந்து போதியளவு கிடைக்கும் பட்சத்தில் தரமான கோழித்தீனை உற்பத்தி செய்ய முடியுமெனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விநாயகர் சதுர்த்தி

[கொழும்புத்துறை]

யாழ் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் விநாயகர்சதுர்த்தி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 00 மணிக்கு விசேட அபிஷேகமும் பூசைஆராதனை வழிபாடும் இடம் பெறும்.

★

(கொழும்புத்துறை)


கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் "விநாயகர சதுர்த்தி" உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 30மணிக்கு விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும்.

மாலை 5 00மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். [24]

### விளையாட்டுப் போட்டி

வீரவேங்கை பவான் பாலர் பாடசாலையும், கப்டன் லீமா சிறுவர் பராமரிப்பு நிலையமும் இணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டி கடந்த செவ்வாய் பி. பகல் துன்னாலை கலிகை கந்தசுவாமி ஆலய முன்றலில் நடைபெற்றது.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கடந்தமிழன் உட்பட இன்னும் பலர் கலந்து சிறப்பித்தனர். (30)



## பொருட்காட்சி

- ஆடை தயாரிப்பு
- சமையற் கலை
- உள்ளக அலங்கரிப்பு
- சிகை அலங்காரம்
- கேக் தயாரிப்பு
- மணமகள் அலங்கரிப்பு

உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும்
விருந்தாகும் பொருட்காட்சி

காலம் : 19-09-1993 - 21-09-1993
நேரம் : காலை 9மணி - மாலை 6 மணிவரை
இடம் : பூநாறி மரத்தடி,
கொக்குவில்,

[இ-7426]

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம்

## பகிரங்க ஏலவிற்பனை

எனது பணிமனையிலுள்ள கீழ்க்காணும் பழுதடைந்த பொருள்கள் 28-09 93ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலவிற்பனையில் பொருள்களை எடுப்பவர் உடனே பணத்தைச் செலுத்தி அன்றே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 24-09-93, 27-09 93 ஆகிய திகதிகளில் வேலை நேரத்தில் எனது பணிமனையில் பார்வையிடலாம்.

1. றெனோல்ட் கார் - 01
2. தட்டச்சு இயந்திரம் ஆங்கிலம் - 04
3. பித்தளைக் குமிழ் (Tab) -01
4. குளிர்சாதனப்பெட்டி - 03

வைத்தியகலாநிதி க. தா. சிவபாதம்,
பிராந்திய தொற்றுநோயியலாளர்,
பிராந்திய பணிப்பாளருக்காக,

சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
59, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம். [இ/7438]



தாயக மண்ணில்:
18 9 - 1992

## 2ஆம் லெப். தேவானந்தி

(சுப்பிரமணியம் தேவராணி)
(கீரிமலை)

உன் தியாகம்
மண்ணை மகிமைப்படுத்துகிறது
உன் ஞாபகம்
காலத்தால் அழியாதது,

இன்று இரவு இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தீசன் வீதி,
கல்லாரை மல்லாகம். (6048)

## ஓராண்டு நினைவலைகள்



தாயின் மடியில்:
12-02-1984
★ ★
இறைவன் அடியில்:
28-09-1992

## செல்வி சற்குரு சசிகலா (கிளி)

திதி: 18-09-93

ஓராண்டு முடிந்ததடி கிளியே
இன்னும் தேடுகின்றோம் முடியவில்லை—உனது
மழலை மொழி கேட்கின்றது
தினம் தினம் எம் காதுகளில்
உருவமாக எம்முன் நீ இல்லை.
ஆனால் எம் நெஞ்சங்களில்—என்றும்
நினைவால் நிலைத்துவிட்டாய் கிளியே.

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரங்கள்,
உற்றார், உறவினர் நண்பர்கள்

சங்கத்தார் வயல்,
இயக்கச்சி.

தற்போதைய முகவரி:
கரம்பைக் குறிச்சி,
மேற்கு வரணி,

(5063)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-09-18

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் இந்திய அரசிடம் 05 கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்த லெப். கேணல் திலீபனுக்கு ஆதரவாக மறியற் போராட்டத்தினை மேற்கொண்ட பொதுமக்கள் மீது திருமலை - அநுராதபுர சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்

1989ஆம் ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப் வன்னிபாபு** [உருத்திரகணேசன் சிறீரங்கன் - புலோலி தெற்கு, பருத்தித்துறை - யாழ்]

**ஜீவன்** [ஐயாமுத்து உதயகுமார் - உடுத்துறை, தாளையடி - வடமராட்சி கிழக்கு]

பருத்தித்துறை - புற்றாளைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது கொல்லப்பட்ட 02 தமிழிளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு யாழ். காங்கேசன்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுலக்ஷன்** [தியாகராசா யோகராசா - வத்திராயன் வடக்கு, தாளையடி - வடமராட்சி]

யாழ். சரவெட்டி, நெல்லியடிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பெண், ஆண் உட்பட 02 பேர்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் பீற்றர்** [கணபதிப்பிள்ளை அரியநாயகம் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை - மட்டு]

**மேஜர் விஜி** [முத்து விசுவலிங்கம் - 69, கொத்தம்பியன் குளம் - தணுக்காய்]

மட்டு பள்ளித்திடலில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**நிமல்ராஜ்** ( —— அம்பாறை)

**லெப். பலவவன்** ( — — மட்டு)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**அருமை** [ — — மட்டு]

மட்டு - மகிளூரில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**சிரஞ்சீவி** [துரைச்சாமி லவக்குமார் - குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி - மட்டு]

**சியாம்** (சுப்பிரமணியம் புனிதகுமார் - பெரியகல்லாறு-02 - மட்டு)

**மித்திரன்** (முத்துச்சாமி பாக்கியராசா - தெல்லத்தை - மொறக்கொலை)

1992ஆம் ஆண்டு யாழ். மாதகல், இளவாலைப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பண்டத்தரிப்பு நோக்கி முன்னேற முயன்றபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**2ம் லெப். தேவானந்தி** (தேவராணி சுப்பிரமணியம் - ஐயனார் கோவிலடி, மல்லாகம் - யாழ்)

**நாகமுத்து** (இராமச்சந்திரன் கோணேஸ்வரன் - சில்லாலை - பண்டத்தரிப்பு)

திருமலை மாவட்டத்தில் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான கிறிஸ்தவ குரு.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[இ-7440]

சிந்தனைக்கு

ஒருவன் அறிவிலி என்றால் அவன் பேசி, அந்த உண்மையை விளம்பரப்படுத்திக்கொள்ள அவனை ஊக்குவிப்பதே சிறந்ததாகும்.

– வுட்ரோ வில்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-09-1998

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

# சிறிலங்காவில் தமிழரின் சுதந்திரம்

காலிமுகத் திடலில் பகிரங்கமாகத் திரியும் தமிழர்களில் இருந்து, கொழும்பு நகரின் சந்துக்களில் உள்ள சிற்றறைகளில் ஒடுங்கி வாழும் தமிழர்கள் வரையில் இன்று கைது செய்யப்படுகின்றார்கள். சித்திரவதைக்குள்ளாகின்றார்கள். தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

இக் கைதுகளின்போது பால் வேறுபாடோ, அன்றி வயது வேறுபாடோ பெருமளவில் பார்க்கப்படுவதில்லை. சிறுவர் முதல் வயோதிபர்வரை சிறுமி முதல் மூதாட்டி வரை கைது செய்யப்படுகின்றார்கள். அதோடு அவர்களின் அந்தஸ்து வேறுபாடும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. உயர் அரச அதிகாரிகளில் இருந்து சாமான்ய கூலித் தொழிலாளிகள் வரை, பாதிப்பிற்குள்ளாகின்றார்கள்.

அதாவது, தமிழரைக் கண்டால் காரணம் எதுவுமின்றிக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. கைது செய்யப்படுபவரின் எந்தவித உறுதிப்பாடும், உத்தரவாதமும் ஏற்கப்படுவதில்லை. சுருங்கக் கூறின், தமிழர் யாவருக்கும் சிறிலங்கா அரசினால் 'பிடிவிறாந்து' விடுக்கப்பட்ட நிலை. அதாவது, கைது செய்யப்படுவதற்கு தமிழர் என்ற அடிப்படைத் தகுதியே போதுமானதாகும்,

அப்பாவித் தமிழருக்கு நிகழும் இவ் அவலம் பற்றி பல கண்டனங்கள் எழுந்தன. பலர் அரசிடம் முறையிட்டும் உள்ளனர். கொழும்பில் கூடாரம் இட்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் இதை நிறுத்துமாறு கெஞ்சியும் பார்த்தன. சிங்கள அரசியல் தலைவர்கள் பேச்சளவோடு நிறுத்திக் கொண்டனர். கைதுகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

ஆனால், இக்கைதுகளையும், தடுத்து வைப்புக்களையும் நியாயப்படுத்துவதற்கென சிறிலங்கா அரசாங்கமும், சிங்கள பேரினவாத பத்திரிகைகளும் திட்டமிட்டே புரளிகளைக் கிளப்பி வருகின்றன. விடுதலைப் புலிகள் கொழும்பில் ஊடுருவி விட்டார்கள். சிங்களத் தலைவர்கள் மீது தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள் எனத் தொடர்ச்சியாக பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதன் மூலம் தமிழரின் கைதுகளை நியாயப்

## தியாகத்தின் தியாகம்

வரலாறு மீண்டும் தோற்றுவிக்கும்,
வசந்தக் காற்று திலீபன்.
பிரபாகரன் யுகத்தை காத்துநிற்கும்,
புரட்சிக் கீற்று திலீபன்

நிறைவான நிலவாகி ஒளிசிந்தும்,
நிலத்தின் திலகம் திலீபன்.
இறவாத புகழுடைய மாவீரர்கள்;
இதயத்தின் இதயம் திலீபன்

தமிழீழ தாயகத்தின் விழிகாட்டும்,
தணியாத தாகம் திலீபன்.
அமிழ்தான தமிழின் மொழிகேட்கும்;
ஆனந்த பூமி திலீபன்.

நீரோடும் நிலத்தோடும் வளங்காட்டும்
நீங்காத நினைவு திலீபன்
தேரோடும் வீதியிலே உடல்கரைந்த
தியாகத்தின் தியாகம் திலீபன்

முள்முடி மன்னர்களின் முகரேகைகளை;
மக்கள்முன் கிழித்தவன் திலீபன்
கள்வடியும் பூக்களின் கவிதைகளாய்,
காலமெல்லாம் மலர்பவன் திலீபன்.

– பு. திலீப்காந்த்

தலதா மாளிகைக்கு

## இராணுவ பாதுகாப்புதொடர பௌத்தபீடங்கள் கோரிக்கை

(கொழும்பு)

கண்டி சிறி தலதா மாளிகைக்கு வழங்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பைத் தொடர்ந்து நீடிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

புத்தரின் புனிதப் பல்லின் பாதுகாவலர்களான இவர்தன நிலமை, அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கண்டி சிறி தலதா மாளிகைக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கு முடிவெடுத்ததைத்தொடர்ந்தே பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவிடம் இவ்வாறு கேட்கப்பட்டது.

தேப்ன ஆசி வேண்டி ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா தலதா மாளிகைக்கு விஜயம் செய்த சமயம் மல்வத்த மகாநாயக்க தேரர் இது சம்பந்தமாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பிய மகஜரின் பிரதி ஒன்றை அவரிடம் சமர்ப்பித்தார். நாட்டின் நிலவும் துரதிர்ஷ்டமான நிலை காரணமாகவே இராணுவப் பாதுகாப்பைத் தொடர்ந்தும் நீடிப்பதாகத் தாம் கோருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

## ஹொரண நுண்கலை கழகத்தை தனிப் பல்கலைக்கழகமாக்கவும்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஹொரண நுண்கலைக் கழக மாணவர்கள் இக்கழகத்தின் மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைத்து ஒரு துணைவேந்தரின் கீழ் பல்கலைக்கழகமாக மாற்றும்படி உயர் கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்காவை மாணவர்கள் கேட்டுள்ளனர்.

நடனம் மற்றும் சங்கீதப் பிரிவுகளின் வசதிகளும், வளங்களும் பற்றாக்குறையாக இருப்பதாக நுண்கலைக்கழக மாணவர்கள் அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

தேசிய இளைஞர்சபைக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் நுண்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களை விடக் கல்வித் தகைமையில் குறைந்த மாணவர்கள் என்றும் ஆனால் அவர்கள் நல்ல வசதிகளையும், வளங்களையும் அனுபவிப்பதாக அமைச்சருக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

உசாத்துணை நூல்கள், கழிப்பிட வசதிகள் மற்றும் வாகன வசதிகளும் நுண்கலைக் கழகத்துக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

# தமிழர்களின் அரசியல் முக்கியத்தை குறைப்பதற்கு சிங்களவர் முயற்சி

## குமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவதை மாற்றி பாராளுமன்றத்தால் தெரிவு செய்யும் வகையில் அரசியலமைப்பைத் திருத்த முயற்சிக்கப்படுவது ஏன் என்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இ. தொ. காவின் ஆதரவில் அண்மையில் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், வடக்கு, கிழக்கு பகுதிகளின் இன்றைய நிலைமை மிக நீண்ட காலத்திற்கு இப்படியே நீடிக்கும் எனச் சிங்களத் தலைவர்கள் உணர்ந்துள்ளனர். தமிழர்கள் இனிமேல் எந்தச் சிங்கள வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க முன் வர மாட்டார்கள் என்பதுடன் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய சில தமிழர்களையும் வாய்மூடி மௌனிகளாக்கி விடமுடியும் என்று சிங்களத் தலைவர்கள் நம்புகின்றனர். பெரும்பான்மையினரான சிங்களவர்கள் தமிழர்களின் அரசியல் முக்கியத்துவத்தை முறியடிக்க வழி கோலுவதற்காகவே இந்த முறை பற்றி ஆலோசிக்கப்படுகிறது எனவும் அவர் கருத்து தெரிவித்தார்.

அத்துடன் இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஜனாதிபதி ஜயவர்த்தன தமது மருமகனும் இராணுவ தளபதியுமாக இருந்த திஸ்ஸ வீரதுங்காவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி தமிழர் போராட்டத்துக்கு ஆறு மாதங்களுக்குள் முடிவு கட்டும்படி பணிப்புரைவிடுத்தார். ஆனால் தமிழ்ப் போராளிகளுடன் போரிட முடியாத படையினர் பின்வாங்கினர். அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் மனமுடைந்த இளைஞர்கள் பெருமளவில் போராளிகளாக மாற இராணுவம் பலம் இழந்தது ஆகிற்று.

இன்று கொழும்பிலும் அதே நிலைமைதான் அனுபவிக்கப்படுகிறது. லலித்தின் கொலையாளிகளையும், பிரேமதாசாவின் கொலையாளிகளையும் தேடுவது என்றபோர்வையில் நடைபெறும் கைதுகளால் தமிழர்கள் பெரும் வேதனைக்கு உள்ளாகியுள்ளனர். கொழும்பில் இன்று தமிழ் இளைஞர்கள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர். பெண்கள் இழிவு படுத்தப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

மேலும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஐ. தே. க. விடம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை. தீர்வுக்கான வழிவகை முன்வைக்கப்பட்டு அரசியல் தீர்வுக்கான வழி ஏற்படுத்தப்படாத விடத்து விரக்தியும், மனக்கசப்பும் ஏற்பட்டு ஈற்றில் பிரிவினை ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் குறிப்பிட்டார்.

## பயமுறுத்திப் பணம்பறித்த சப்-இன்ஸ்பெக்டர் கைது

(கொழும்பு

பயமுறுத்திப் பணம் பறித்தல் மற்றும் களவுகள் சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த முன்னாள் விசேட அதிரடிப் படை சப்-இன்ஸ்பெக்டர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து வேறு இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

விசேட அதிரடிப் படைப் பிரிவிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட இந்த நபர் பொலிஸ் சீருடையில் சூதாட்ட இடங்களுக்குச் சென்று பயமுறுத்திப் பணம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. பல களவுகளில்சம்பந்தப்பட்ட இந்த முன்னாள் சப்-இன்ஸ்பெக்டர் நீதி மன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிமாவோ நாடு திரும்பினார் அரசியலில் ஈடுபடலாம்?

(கொழும்பு)

குறுகிய கால வெளிநாட்டு பயணத்தை முடித்துக் கொண்டுதிருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று சிறிலங்காவுக்கு திரும்பியுள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மறைந்த தலைவர்களின் ஒருவரான லலித் அத்துலத் முதலியின் கொள்கையை முன்னெடுத்து செல்வதற்கான செயல் திட்டங்களைதான் திட்டமிடுவதாகவும் இதற்காக தற்போது ஏற்பட்டுக்கொண்டு இருக்கும் மாற்றங்களை மிக அவதானமாக அவதானித்து வருவதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் "ராவய" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

அவசியம் ஏற்படும் சமயத்தில் லலித் அத்துலத் முதலியின் கொள்கையை முன்னெடுத்து செல்வதற்கு திருமதி சிறிமாவோ அத்துலத் முதலி முன்னிற்பார் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### பாராட்டும் பிரியாவிடையும்

இடமாற்றலாகி ஆனைக்கோட்டை அ. மி. த. க. க. பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட அதிபர் திரு. சி. நாகையா அவர்களுக்கு அண்மையில் நவாலி அரசடி மகா வித்தியாலயத்தில் அவரது சேவையைப் பாராட்டி பிரிவுபசார வைபவம் நடைபெற்றது.

### வரிச்சார்த்தமாக கரியுற்பத்தி ஆரம்பம்

குடாநாட்டிலே ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக சுழற்சி முறையில் உள்ள ஓட்டுத் தொழிற்சாலையில் மரக்கரியினை உற்பத்தி செய்து அனுப்புவதற்கான முயற்சியினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய

## வெள்ளையர்களின் உதவி நிர்வாகத்திற்கு தேவை

–நெல்சன் மண்டேலா

(ஜோகானஸ்பர்க்)

தென் ஆபிரிக்க நாட்டை நிர்வகித்து நடத்திச் செல் நடத்திய பேரணி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வெள்

கப்பட்ட நிலை. அதாவது, கைது செய்யப்படுவதற்கு தமிழர் என்ற அடிப்படைத் தகுதியே போதுமானதாகும்.

அப்பாவித் தமிழருக்கு நிகழும் இவ் அவலம் பற்றி பல கண்டனங்கள் எழுந்தன. பலர் அரசிடம் முறையிட்டும் உள்ளனர். கொழும்பில் கூடாரம் இட்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் இதை நிறுத்துமாறு கெஞ்சியும் பார்த்தன. சிங்கள அரசியல் தலைவர்கள் பேச்சளவோடு நிறுத்திக் கொண்டனர். கைதுகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

ஆனால், இக்கைதுகளையும், தடுத்து வைப்புக்களையும் நியாயப்படுத்துவதற்கென சிறிலங்கா அரசாங்கமும், சிங்கள பேரினவாத பத்திரிகைகளும் திட்டமிட்டே புரளிகளைக் கிளப்பி வருகின்றன. விடுதலைப் புலிகள் கொழும்பில் ஊடுருவி விட்டார்கள். சிங்களத் தலைவர்கள் மீது தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள் எனத் தொடர்ச்சியாக பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதன் மூலம் தமிழரின் கைதுகளை நியாயப்படுத்தவும் முற்படுகின்றன.

இதேவேளை தற்பொழுது கைது செய்யப்படும் தமிழர்கள் பொன்முட்டை இடும் வாத்துக்களாக சிறிலங்காப் பொலிஸாருக்கு மாறி வருகின்றனர். அதாவது, கைதாகும் ஒருவரை விடுவிப்பதற்கு 15.000 ரூபாவில் இருந்து 50 000 ரூபா வரை லஞ்சம் பெறப்படுகின்றது. இதில் விடுதலையாகும் கால இடைவெளியை அனுசரித்து பணத்தின் தொகை பேரம் பேசப்படுவதாகவும் உள்ளது. ஆனால் இவை ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவோ, கொழும்பில் தமிழர்கள் நிரம்பி வழிகின்றனர், சுதந்திரமாக நடமாடுகின்றனர், பாதுகாப்பாகவுள்ளனர் எனப் பேசி வருகின்றார்.

அவ்வாறானால் கொழும்பில் தமிழ் மக்களின் பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான வாழ்க்கை என்பது எது? அதாவது, மந்தைகள்போல் தேவையானபோது பிடிப்பதும், அடைப்பதும் தான் தமிழருக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரமும், பாதுகாப்புமா? அல்லது இதுவே தமிழருக்குப் போதுமான உரிமை என டி. பி. விஜயதுங்கா கருதுகின்றாரா?

இதேவேளை, சிங்களப் பேரினவாதத்தின் இச்செயற்பாடு குறித்து ஆச்சரியப்படவோ, அதிர்ச்சி கொள்ளவோ ஏதுமில்லை. ஏனெனில், சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே தமிழர் குறித்துத் தெளிவான கொள்கையைக் கொண்டுள்ளது. இதில் இலங்கை சிங்களவருக்கென தத்தம் செய்யப்பட்ட புனிதபூமி. இங்கு மற்றவர்கள் எல்லோருமே இரண்டாம்தர பிரஜைகள் என்பதே அதன் நிலைப்பாடாகும்.

இந்நிலையில் சிங்களப் பேரினவாதத்தின் கைது நடவடிக்கைகளைக் கண்டிப்பது என்பதைவிட தமிழர்களின் அறியாமை குறித்து அனுதாபப்படுவதே பொருத்தமானதாகும். அதாவது, சிறிய வசதியான வாழ்விற்காகத் தமது சுதந்திரம், பாதுகாப்பு என்பதைக் கைவிட்டு, அடிமைகளாக வாழ விரும்புபவர்களுக்காக வேறு எதைச் செய்ய முடியும்? ஆகையினால், இவர்கள் தமது தாயகம், சுதந்திரம் என்பனவற்றைச் சிந்திக்கும் வரை சிறிலங்காப் பொலிஸாருக்குப் பொன்முட்டையிடும் வாத்துக்களாகவும், சிங்கள பேரினவாதிகளுக்கு அரசியல் பகடைக்காய்களாக இருப்பதும் தவிர்க்க முடியாதது.

# ஹொரண நுண்கலை கழகத்தை தனிப் பல்கலைக்கழகமாக்கவும்

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஹொரண நுண்கலைக் கழக மாணவர்கள் இக் கழகத்தின் மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைத்து ஒரு துணை வேந்தரின் கீழ் பல்கலைக் கழகமாக மாற்றும்படி உயர் கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்காவை மாணவர்கள் கேட்டுள்ளனர்.

நடனம் மற்றும் சங்கீதப் பிரிவுகளில் வசதிகளும், வளங்களும் பற்றாக்குறையாக இருப்பதாக நுண்கலைக்கழக மாணவர்கள் அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

தேசிய இளைஞர்சபைக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் நுண்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களை விடக் கல்வித் தகைமையில் குறைந்த மாணவர்கள் என்றும் ஆனால் அவர்கள் நல்ல வசதிகளையும், வளங்களையும் அனுபவிப்பதாக அமைச்சருக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

உசாத்துணை நூல்கள், கழிப்பிட வசதிகள் மற்றும் வாகன வசதிகளும் நுண்கலைக் கழகத்துக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் நடவடிக்கைகள் வெளிநாடுகளில் அவதானிப்பு

## வெளியுறவு அமைச்சர் ஹமீத்

(கொழும்பு)

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி அரசு அவதானித்து வருவதாகப் பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள சிறிலங்காத் தூதுவராலயங்கள் மூலம் அரசு புலிகளின் நடவடிக்கை பற்றித் தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் களுத்துறை மாவட்ட உறுப்பினர் இலக்கருணாரெட்ணாவின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

புலிகள் அந்தந்த நாடுகளின் சட்டத்தை மீறாமல் நடக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அரசுகள் புலிகளின் நடமாட்டத்தில் தலையிட முடியாது. புலிகள் சட்டத்தை மீறினால் தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

### தகவுத்திறன் பரீட்சை

பொது எழுதுநர் சேவையின் வகுப்பு 11 தரம் 'அ' விலுள்ள உத்தியோகத்தர்களை வகுப்பு 1க்கு பதவி உயர்த்துவதற்கான தகவுத்திறன் பரீட்சைகள் எதிர்வரும் சனிக்கிழமை அன்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேஜர் பத்மசிறி உடுகம்பொல மீதான

# தங்கக் கடத்தல் வழக்கில் சாட்சிகளுக்கு பிடியாணை

(கொழும்பு)

மேஜர் பத்மசிறி உடுகம்பொல வழக்கில் சாட்சிகளான லெப். மகிந்தா விக்கிரமாராச்சியையும், திரு மதிசு மந்திரன்மாலாவையும் கைதுசெய்து நீதி மன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீர்கொழும்பு மேலதிக நீதிபதி ஜ எம். அபயரெட்ணா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தகுந்த காரணம் காட்டாமல் நீதிமன்றத்துக்கு இருசாட்சிகளும் ஆஜர் செய்யத் தவறியதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேஜர் பத்மசிறி உடுகம்பொல சிங்கப்பூரிலிருந்து 31.1 92இல் 70லட்சம் ரூபா பெறுமதியான தங்கம் கடத்திய வழக்குத் தொடர்பாகவே சாட்சிகளைக் கைது செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கைது செய்து ஒக்ரோபர் 6ஆம் திகதி அல்லது அதற்கு முன் ஆஜராக்கும் படி அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயக் கூட்டமும் பயிற்சி வகுப்பும்

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வடக்கு தொடர்மாளர் பகுதியில் 93, 94ஆம் ஆண்டுக்கான காலபோக விவசாயக் கூட்டமும் பயிற்சி வகுப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, கரவெட்டி யாக்கரு விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ராட்டத்துக்கு ஆறு மாதங்களுக்குள் முடிவு கட்டும்படி பணிப்புரைவிடுத்தார். ஆனால் தமிழ்ப் போராளிகளுடன் போரிட முடியாது படையினர் பின்வாங்கினர். அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு

### பரீட்சார்த்தமாக கரியுற்பத்தி ஆரம்பம்

குடாநாட்டிலே ஏற்படுகின்ற எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக [illegible]லுள்ள ஒட்டுத் தொழிற்சாலையில் மரக்கரியினை உற்பத்தி செய்து அனுப்புவதற்கான முயற்சியினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழிற் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக 80 ஆயிரம் அளவிலான விறகு எரித்து கரி தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை பொதி செய்து குடாநாட்டிற்குள் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடைமுறை சாத்தியமாக அமையும் பட்சத்தில் இவ் உற்பத்தியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### மதிய உணவு முத்திரைக்கு குரக்கன் மா

(யாழ்ப்பாணம்)

மாணவர் மதிய உணவு முத்திரைக்கு குரக்கன் மா விநியோகிக்கப்படவுள்ளது. உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் போதியளவு இல்லாமையினால் வைகாசி ஆடி மாதங்களுக்கான முத்திரைகளுக்கு குரக்கன் மா வழங்கப்படும் எனவும், இதற்கென வர்த்தகத் திணைக்களத்தினால் வழங்கப்படும் குரக்கன் மாவை கூட்டுறவுச் சங்கங்கள் பெற்று ஒரு கிலோ 35ரூபா விலையில் மேற்படி இரு முத்திரைகளுக்கும் இரண்டு கிலோ வீதம் வழங்கலாம் எனவும் யாழ்-செயலக சமூகசேவைகள்பகுதி பிரதிப் பணிப்பாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.

### தனிச் சிங்களத்தில் படிவங்கள்

யாழ் மாவட்ட கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உணவு முத்திரை தொகுப்பு சம்பந்தமான படிவங்கள் தனிச் சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ளன. இதனால் இப்படிவங்களை எவ்வாறு நிரப்புவது என கிராம சேவையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

அத்துலத் முதலியின் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான செயல் திட்டங்களைதான் திட்டமிடுவதாகவும் இதற்காக தற்போது ஏற்பட்டுக்கொண்டு இருக்கும் மாற்றங்களை மிக அவதானமாக அவதானித்து வருவதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் ''ராவய'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

### பாராட்டும் பிரியாவிடையும்

இடமாற்றலாகி ஆனைக்கோட்டை அ.மி.த.க.க. பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட அதிபர் திரு. சி. நாகையா அவர்களுக்கு அண்மையில் நவாலி அரசடி மகா வித்தியாலயத்தில் அவரது சேவையைப் பாராட்டி பிரிவுபசார வைபவம் நடைபெற்றது.

# வெள்ளையர்களின் உதவி நிர்வாகத்திற்கு தேவை

–நெல்சன் மண்டேலா

(ஜோகானஸ்பர்க்)

தென் ஆபிரிக்க நாட்டை நிர்வகித்து நடத்திச் செல்வதில் வெள்ளையர்களின் உதவி அந்நாட்டுக்கு தேவைப்படுவதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

ஜோகானஸ்பர்க் அருகே காங்கிரஸ் ஆதரவாளர்கள் நடத்திய பேரணி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வெள்ளையரல்லாதாரின் ஆட்சி பற்றி வெள்ளையர்கள் மத்தியில் இருக்கும் அச்சத்தைப் போக்கிட அவர்கள் உதவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# மருந்து பொருள்கள் இல்லை மூன்றுலட்சம்பேர்வரை பலி

## ஈராக்கிய அமைச்சர் தெரிவிப்பு

(பக்தாத்)

ஈராக் மீது ஐ.நா. விதித்திருக்கும் பொருளாதார தடையின் காரணமாக கடந்த மூன்று ஆண்டு காலத்தில் மட்டும் மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர் மரணமடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயிர்ப்பலிகளுக்கு மருந்துத் தட்டுப்பாடே பெருமளவில் காரணமெனவும், ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மாதாந்தம் 4,000பேர் என்ற அடிப்படையில் இறந்து வருவதாகவும் ஈராக் சுகாதார அமைச்சர் உமீத் மக்ஹத் முபாரக் தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர்களிடம் மேலு கூறுகையில், ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்களின் மரண விகிதம் 1800 முதல் 6500 வரை உயர்ந்துள்ளது எனவும் தொற்றுநோய்களான வயிற்றோட்டம், இளம்பிள்ளை வாதம், போன்றவற்றால் அநேகர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

சோமாலியாவில்

# ஐ. நா. துருப்பு விடயத்தில் உள்ளூர் மக்கள் அதிருப்தி

(ரோம்)

சோமாலியாவில் நிலை கொண்டுள்ள ஐ.நா. துருப்புகள் விவகாரத்தில் உள்ளூர் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தப்பபிப்பிராயங்களை நிவர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகும் என்று அமெரிக்க மற்றும் இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர்கள் இணைந்து தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லெஸ் அஸ்பினும், இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் பாபியோ பப்பியும் ரோமில் சந்தித்துப் பேசினர்.

சோமாலியாவில் நடைபெறும் ஐ.நா. நடவடிக்கைகளால் அமெரிக்காவினதும் ரோமினதும் நல்லுறவு பாதிக்கப்படக்கூடாது என்றும் இரு அமைச்சர்களும் கருத்து தெரிவித்தனர்.

இத்தாலிய துருப்பினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சோமாலியாவின் கிளர்ச்சிப் படையினருக்கு லஞ்சம் கொடுப்பதாக புகார் கூறப்படுவது தெரிந்ததே. இதனால் அமெரிக்காவிற்கும் இத்தாலிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இத்தாலியத் துருப்பினர் தமக்கு எவ்விதத்திலும் ஒத்துழைப்பு தருவதில்லை என்று நைஜீரியப் படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

# ஈழநாதம்


## பதவி வெற்றிடம்

### கணக்காளர் பதவி (ஆண்)

கிளிநொச்சியில் இயங்கும்
பத்திரிகை நிறுவனத்துக்கு
**கணக்காளர் தேவை**

சம்பளம்: மாதாந்தம் ரூ. 3000/-
அத்துடன் இலவச தங்குமிட வசதி
சாப்பாடு ஆகியனவும் ஒழுங்கு செய்து தரப்படும்.

தகுதியான ஆண் விண்ணப்பதாரர் 22 09 93 புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு தகைமைச் சான்றிதழ்கள், முன் வேலை அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் சமுகம் தரவும்.

**ஈழநாதம் நிறுவனம்**
யாழ்ப்பாணம்.

(இ)



## முக்கிய அறிவித்தல்

யாழ் வர்த்தகர் சங்கம், வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம், யாழ் வர்த்தக ஊழியர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம் இணைந்து நடாத்தும் தியாகி லெப்.கேணல். திலீபனின் 6ஆம் ஆண்டு உண்ணாவிரத நிகழ்வு.

இந்தியப்படை நம் தமிழ் இன மக்களுக்கு இழைத்த கொடுமைகளை தாங்காது துயர் கொண்டு எம் மக்களுக்காக, எம் மண்ணுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 15- 09- 87 தொடக்கம் 26 - 09 - 87 வரை நல்லூர் கந்தசாமி கோவில் வீதியிலே உண்ணாவிரதம் இருந்து ஈகைச்சாவு அடைந்த தியாகி லெப். கேணல். திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவுகூரும் முகமாக இன்று 18-09-93 சனிக்கிழமை மேற்குறிப்பிட்ட சங்கங்களின் உறுப்பினர்கள் வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி யாழ் வர்த்தகர் சங்கப்பணிமனையில் காலை 7. 00 மணிக்கு ஒன்றுகூடி ஊர்வலமாக புறப்பட்டு நல்லூர்வீதியை சென்றடைந்து அங்கு 7. 30 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும். அதில் தவறாது ஊர்வலத்தில் கலந்து உண்ணாவிரதத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி சங்கங்களின் நிர்வாகிகள்.

[5954]



## வேலை வாய்ப்பு

### விற்பனை பிரதிநிதி


## பெறுபேறுகள்

1989ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய க. பொ. த. (சா/தர) செய்முறைப் பரீட்சைக்கான பெறுபேறுகள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றன.

இப் பெறுபேறுகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## ஐ.ஐ.தே.முவும் ஐ.தே.கவும் அடுத்த வாரம் இணையும்?

காமினிதிசாநாயக்க தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான இணைப்பு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்பாக கைகூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முடிவுறும் கட்டத்தை நெருங்கியிருப்பதாகவும், காமினிதிசாநாயக்கவிற்கும் மற்றுமொருவருக்கும் ஐ. தே. க. தேசியபட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படலாம் எனவும் நம்பகரமாகக் கூறப்படுகிறது.

## மோட்டார் சைக்கிளால் தவறி விழுந்து மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறையிலிருந்து நாகர் கோவில் நோக்கி மோட்டச்சைக்கிளின் பின்ஆசனத்தில் இருந்து சென்று கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் வீதியில் விழுந்து மரணமானார்.

நோயுற்று இருந்த கணவரின் தாயை பார்ப்பதற்காக சென்று கொண்டிருந்த போது குடத்தனையில் இச் சம்பவம் நடைபெற்றது.

பருத்தித்துறை சிவன் கோவிலடியைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா செல்வராணி என்பவரே இவ்வாறு மரணமானவராவார். தன்னைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருந்த மருமகள் இறந்த செய்தி கேட்டு நோயுற்ற நிலையில் இருந்த மாமியும் மரணமானார். (யோ)

## விஞ்ஞான கண்டுபிடிப்புகள் தமிழில் எழுதப்படவேண்டும்

–புதுவை இரத்தினதுரை

[யாழ்ப்பாணம்]

பத்திரிகை நடத்துவது என்பது மிகவும்கடினமான காரியம். இந்தநெருக்கடியான காலகட்டத்தில் கடதாசி மற்றும்அச்சு மைக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் நங்கூரம் சமூக-அறிவியல் ஏடு தொடர்ந்து வெளிவருவது பாராட்டுக்குரியது தமிழீழம் கிடைத்த பிறகு சஞ்சிகைகள், நூல்கள் வெளிவரலாம் அது கெட்டித்தனமான காரியமல்ல. இந்த நிர்ப்பந்தங்கள் மத்தியிலும் வெளிவரும் நங்கூரம் தமிழீழம் கிடைத்த பிறகும் வெளிவரும் என்பது எனது நம்பிக்கை என்று நங்கூரம் வெளியீட்டு வைபவத்தில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பேசும்போது கூறினார்.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற நங்கூரம் ஆண்டுமலர் ... புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார். இந்த வைபவத்திற்கு யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தலைமை வகித்தார். நிதர்சனப் பொறுப்பாளர் ஜவான் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தமிழ் எழுத்தாளர்கள் தமிழின் தொன்மை பெருமை பற்றி மாத்திரம் எழுதிக் கொண்டிருந்தால் போதாது. சமகால சமூக, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைத் தமிழில் எழுதவேண்டும். எமது எழுத்தாளர்களின் பார்வையின் வீச்சு சமகால விஞ்ஞான, தொழில் நுட்ப மாற்றங்களைப் பிரதிபலிப்பதாக அமைவது பயன்பொருந்தமானது. ஆனால் இந்தப் பிரஞ்ஞையும், அறிவியல் சார் படைப்புகளை எழுதுபவர்க

## கருணாநிதி - வாழப்பாடி இரகசியச் சந்திப்பு

திராவிட முன்னேற்ற கழக தலைவர் மு. கருணாநிதியும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் வாழப்பாடி ராமமூர்த்தி, மூப்பனார் ஆகியோரும் இரகசிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

கருணாநிதியின்பேர்த்தியின் திருமண வீட்டிற்கு திரு. வாழப்பாடி ராமமூர்த்தி, மூப்பனார் ஆகியோர் சென்றிருந்தபோது இந்த பேச்சுவார்த்தை நிகழ்ந்துள்ளது. இப் பேச்சுவார்த்தையின் போது ஜெயலலிதா பற்றி திரு. மு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில்: ஜெயலலிதாமதப் போக்கு வளர இடமளித்து வருபவர் எனவும் இராமர் ஜென்ம பூமி விவகாரத்தில் ஜெயலலிதா கூடுதலாக ஈடுபட்டவரெனவும் இவரது போக்கால் தமிழ்நாடு பெரும் இன்னல்களை சந்திக்க வேண்டி வருமெனவும் அவர் தெரிவித்தார்.

## கப்டன் வண்ணத்திற்கு முல்லையில் இறுதி அஞ்சலி

யாழ்.மாவட்டத்தில் கடந்த 13ஆம் திகதி ஏற்பட்ட எதிர்பாராத விபத்தின்போது வீரச்சாவைத் தழுவிய பழம்பாசி நெடுங்கேணியைச் சேர்ந்த முன்னாள் முல்லை மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் கப்டன் வண்ணம் [சிதம்பரப்பிள்ளை வடிவேல்] அவர்களின் புகழுடல் நேற்று முன்தினமும்நேற்றும்முல்லை மாவட்ட நெடுங்கேணி, ஒட்டிசுட்டான், முத்தையன்கட்டு, புதுக்குடியிருப்பு. பொக்கணை, முள்ளிவாய்க்கால், முள்ளியவளை ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

இவ் அஞ்சலி நிகழ்வில் பெருந்திரளான மக்கள் ஒவ்வொரு இடங்களிலும் கூடிநின்று கதறி அழுது கண்ணீர் வடித்து அஞ்சலி செலுத்தினர். வாண் வாத்திய இசையுடன், இராணுவ மரியாதைகளுடனும் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது.

### கடற் புலிகள்

மேற்கில் நாளை அராலி, 20 ஆம் திகதி நாவாந்துறை. 21 ஆம் திகதி குருநகர். 22 ஆம் திகதி பாஷையூர். 23ஆம்திகதி கொழும்புத்துறை. வலிகாமம் மேற்கில் 25ஆம்திகதி மூளாய் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### திலீபன்

களை தங்கள் ஆடைகளில் அணிந்துள்ளனர். பாடசாலை மாணவர்களின் கவிதைகள், பாடல்கள் பலவும் இடம் பெற்று வருகின்றன.

இந் நோன்பு நிகழ்வின் போது தியாகி திலீபனின் 12 தினங்கள் உண்ணாவிரதம் இருந்த வரலாறுகள் வீடியோ படக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் வில்லிசை நிகழ்ச்சிகளும்இடம் பெற்று வருகின்றன.

வடமராட்சி வடக்கு கடற்

### தியாகி

வில் / தெல்லிப்பழை வட்டம் சுன்னாகம் சிவன்கோவில் முன்றல், நாவடி சிற்றூர் மக்கள், யாழ்ப்பாண வட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, யாழ் மத்தி சிற்றூர் மக்கள்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் வீதி. நல்லூர்ப்ப. நோ. கூ சங்கம், வர்த்தகர் சங்கம். கரவெட்டி வட்டம் நெல்லியடி கிழக்கு சாமியன் அரசடி துன்னாலை மத்தி மேற்கு சிற்றூர் மக்கள், கரவெட்டி தெ ப. பொ. உ வி கூ. சங்கம்; உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி, உடுப்பிட்டி, உடுப்பிட்டிவட. தெற்கு மக்கள்; பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி புலோலி தெற்கு. மந்திகை மக்கள்; பளை வட்டம், பளை பிரதேச சபை முன், தென்னந்தோட்ட ஊழியர், வர்த்தகர் சங்கம், சிறிமுருகன்கல்விநிலையம்; கொடிகாமம் வட்டம், புகையிரத நிலைய அருகாமை கருணாபுரம்; மந்துவில் சின்னச் சந்தையடி. அல்லாரை தெற்கு. தவம் கல்விநிலையம், வடலரணி கல்வி நிலையம்; சாவகச்சேரி வட்டம்; மணம் குணாய் பிள்ளையார் கோவில் முன்பாக, கோயில் குடியிருப்பு சரசாலை வடக்கு, கெருடாவில், மட்டுவில் தெற்கு. தும்புத் தொழில்வர்த்தகர் சங்கம் வகுப்புத் தொழிலாளர்சங்கம், மீசாலை மேற்கு. கலைமகள் கல்வி நிலையம் அருண் கல்விநிலையம், யுபீற்றர் கல்வி நிலையம், கைதடி வட்டம், கைதடிச் சந்திக்கு அருகாமையில்கைதடி

## திருட்டு

(திருக்கோணமலை)

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி பதில் பணிப்பாளர் ஈ. எம். ஜெயராஜ் அவர்களிடமிருந்து சில முக்கிய ஆவணங்களும் ரூபா 73,500 ரொக்கப் பணமும் திருக்கோணமலையில் களவாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பொலீஸார் நடத்திய தேடுதலைத் தொடர்ந்து பணமும், ஆவணங்களும் மீட்கப்பட்டன.

அதிபர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் திருக்கோணமலை டொக்யாட் றோட்டிலுள்ள சமூக சேவைகள் நிலையத்தின் அறை ஒன்றில் தங்கியிருந்தார் அவர் வெளியே சென்று திரும்பிய போது பணமும், ஆவணங்களும் அடங்கிய பயணப்பெட்டி திருடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

பொலிசில் அவர் செய்த முறைப்பாட்டை அடுத்துச் சந்தேக நபரும், சமூக சேவைகள் நிலையத்தில் தங்கியிருந்த இன்னொருவரும் கைது செய்யப்பட்டு, பணமும் ஆவணங்களும் பெட்டியுடன் மீட்கப்பட்டன

திருமறை ப ... நோ கூ சங்கம் சென்ஜோன்ஸ் அக்கடமி, மணியரசன் குடியிருப்பு.

### சிரமதானம்

சிரமதானப் பணிகள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறும் சங்கானை வட்டத்தில் சுழிபுரம் முகாம் சுத்தம் செய்தல்; உடுவில்/தெல்லிப்பழை வட்டம், ஏழாலை வைத்தியசாலை துப்புரவு, ச. ச. நிலையம், நல்லூர் வட்டம், கொண்டலடி ச ச. நி வீதி துப்புரவு. ச. ச. நி அங்கத்தவர், கரவெட்டி வட்டம் கரவெட்டி தெற்கு மாதிரி கிராமம் துப்புரவு. திருமகள் ச. ச நிலையம், பருத்தித்துறை வட்டம் அல்வாய் வடக்கு பாடசாலை சுற்றாடல் துப்புரவு. கலைமகள் ச. ச. நி. இளங்கோ ச. ச நி, பொதுமக்கள், மாணவர், தீவகக் கோட்டம் முஸ்லிம் பகுதி

முன்னைவத்து 15-09-87 தொடக்கம் 26-09-87 வரை நல்லூர் கந்தசாமி கோவில் வீதியிலே உண்ணாவிரதம் இருந்து ஈகைச் சாவு அடைந்த தியாகி லெப். கேணல். திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவுகூரும் முகமாக இன்று 18-09-93 சனிக்கிழமை மேற்குறிப்பிட்ட சங்கங்களின் உறுப்பினர்கள் வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி யாழ் வர்த்தகர் சங்கப்பணிமனையில் காலை 7.00 மணிக்கு ஒன்றுகூடி ஊர்வலமாக புறப்பட்டு நல்லூர்வீதியை சென்றடைந்து அங்கு 7.30 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும். அதில் தவறாது ஊர்வலத்தில் கலந்து உண்ணாவிரதத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி சங்கங்களின் நிர்வாகிகள்.

[5954]


# வேலை வாய்ப்பு

## விற்பனை பிரதிநிதி

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரரிடமிருந்து பின்வரும் தகைமைகளை எதிர்பார்க்கின்றோம்.

(1) ஆகக் கூடியது: 24 வயது.

(2) கல்வித் தகைமை: க.பொ.த. (உ/த)ல் 3 பாடங்களில் சித்தி.

(3) சுறுசுறுப்பாக செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும்.

வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

இரு சிபாரிசு செய்யக்கூடியவர்களின் பெயர்களுடன் கூடிய சுய விபரங்களுடன் 27-09-93ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக முகாமையாளர்
ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்
14, சினியர் லேன்,
யாழ்ப்பாணம்.

(சி-7441)


# நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

தியாகச் சுடர் திலீபனின் 6-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நல்லூர் பிரதேசவர்த்தகர் சங்கம் (19-09-93) ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிதொடக்கம் அனைத்து வர்த்தகர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்து கொள்ளும் உண்ணாவிரதத்தை நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கவுள்ளது. நல்லூர் பிரதேசவர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி இந்த உணர்வு பூர்வமான உண்ணா விரதத்தில் தவறாது பங்கு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

சு. தனபாலசிங்கம் — என். கே. குலசிங்கம்
செயலாளர் — (சி/7442) — தலைவர்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


இந்தநெருக்கடியான காலகட்டத்தில் கடதாசி மற்றும் அச்சுமைக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் நங்கூரம் சமூக-அறிவியல் ஏடு தொடர்ந்து வெளிவருவது பாராட்டுக்குரியது தமிழீழம் கிடைத்த பிறகு சஞ்சிகைகள், நூல்கள் வெளிவரலாம் அது கெட்டித்தனமான காரியமல்ல. இந்த நிர்ப்பந்தங்கள் மத்தியிலும் வெளிவரும் நங்கூரம் தமிழீழம் கிடைத்த பிறகும் வெளிவரும் என்பது எனது நம்பிக்கை என்று நங்கூரம் வெளியீட்டு வைபவத்தில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பேசும்போது கூறினார்.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற நங்கூரம் ஆண்டுமலர் வெளியீட்டு விழாவில், அதை வெளியிட்டு உரை நிகழ்த்திய

## உளவளத்துறை ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் உளவளத்துறை பற்றிய அறிமுகக் கற்கைநெறியின் தொகுதி 02 இற்கான ஆரம்ப வைபவம் இன்று பி.ப 2 மணிக்கு உளநலத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரம் தலைமையின்கீழ் கலைப்பீடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வில் ஆரம்ப உரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தவுள்ளார். உளநலத்துறை விரிவுரையாளர் அருட்தந்தை எஸ். டேமியன் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார். இக் கற்கைநெறியில் 140 பேர் பங்குகொள்கின்றனர்.

## தியாகி

நீங்கள் அவற்றைக் கொண்டுவந்து இங்கு வைப்பதன் மூலம் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது வருங்கால சமுதாயத்திற்கு எமது தியாகிகளின் வரலாற்றை உணர்த்த முடியும்" என்றார். நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. சு. இராசநாயகம் மங்கள விளக்கேற்றி வைக்க யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புபொறுப்பாளர்செல்வி தணிகைச் செல்வி நாடாவை வெட்டி கண்காட்சியை திறந்து வைத்தார். அதைஅடுத்து மக்கள் கண்காட்சியைபார்வையிட்டனர். தொடர்ந்து தியாகி திலீபனின் மூன்றாம் நாள் உண்ணாவிரத நிகழ்வில் கலந்துகொண்டுள்ள பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டுள்ளவர்களும் பகுதி பகுதியாக வந்து கண்காட்சியை பார்வையிட்டனர். (சி)

புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தலைமை வகித்தார். நிதர்சனப் பொறுப்பாளர் ஜவான் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தமிழ் எழுத்தாளர்கள் தமிழின்தொன்மை பெருமை பற்றி மாத்திரம் எழுதிக் கொண்டிருந்தால் போதாது. சமகால சமூக, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைத் தமிழில் எழுதவேண்டும். எமது எழுத்தாளர்களின் பார்வையின் வீச்சு சமகால விஞ்ஞான, தொழில் நுட்ப மாற்றங்களைப் பிரதிபலிப்பதாக அமைவது பயன்பொருந்தமானது. ஆனால் இந்தப் பிரஞ்ஞையும், அறிவியல் சார் படைப்புகளை எழுதுபவர்களும் குறைவாகவே காணப்படுகிறார்கள்-இவ்வாறு புதுவை இரத்தினதுரை மேலும் தெரிவித்தார்.

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் முதற்பிரதியை வெளியிட்டு வைத்தார். செல்வன் இ. மயூரன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

குற்றவாளிக் கூண்டில் மனிதன் என்ற வழக்காடு மன்றமும் இடம்பெற்றது.

## பொருள் இறக்கல் ஆரம்பம்

பருத்தித்துறை இறங்குதுறையில் தரித்து நின்ற மா இறக்கி முடித்த 'வாதுவ' கப்பல் கொழும்பு நோக்கி புறப்பட்டது. இக் கப்பலில் யாழ். பிரதான தபாலக உத்தியோகத்தர்கள் 20 தபால் பொதிகளை அனுப்பிவைத்துள்ளனர்.

காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பல் பருத்தித்துறைக்கு வந்துள்ளது பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனே ஆரம்பமாகின.

## கடற் புலிகளுக்கு

ஆம் திகதி புத்தளம் கற்பிட்டி பகுதிகளுக்கு வருகை தந்து பொது மக்களைச் சந்தித்தனர் இவர்களுடன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டெஸ்ரஸ் பெரேராவும் சென்றிருந்தார்

கொழும்புத்துறை. வலிகாமம் மேற்கில் 25ஆம்திகதி மூளாய் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## திலீபன்

களை தங்கள் ஆடைகளில் அணிந்துள்ளனர். பாடசாலை மாணவர்களின் கவிதைகள், பாடல்கள் பலவும் இடம் பெற்று வருகின்றன.

இந் நோன்பு நிகழ்வின் போது தியாகி திலீபனின் 12 தினங்கள் உண்ணாவிரதம் இருந்த வரலாறுகள் வீடியோ படக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் வில்லிசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வருகின்றன.

வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் கப்பர் மடத்தில் நேற்று அடையாள உண்ணாவிரதமும் நடைபெற்றது. இப்பகுதியில் தினமும் கிராம ரீதியாக நோன்பு நடைபெற்று வருகிறது.

நேற்று தீவக மக்களால் கொட்டடி வில்லூன்றி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பறவைக் காவடியுடன் பெருந்திரளான மக்கள் புறப்பட்டு காவடியுடன் பவனியாக ஐந்து சந்திக்கு சென்றனர். பின்னர் அங்கிருந்து திலீபனின் உருவப்படத்தை தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தியை மக்கள் இழுத்துச் செல்ல பின்னால் காவடி பவனியாக நல்லூர் வடக்கு வீதியை அடைந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த உண்ணா நோன்பு பந்தல்களில் மக்கள் அமர்ந்து மாலை வரை உண்ணா நோன்பை அனுஷ்டித்தனர்.

(88) (யோ)

## விடுவிக்க

றோர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரசு ஆகியவை இணைந்து உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கைதிகள் கேட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக யுத்தக் கைதிகளால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10932

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-7312, 24-0873, 24-3364, 28-1730, 28-0523, 26-4393, 26-1494.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-6480, 27-5482, 43-2666, 42-1350, 42-1320

பிரதேச சபை முன், தென்னந்தோட்ட ஊழியர், வர்த்தகர் சங்கம், சிறிமுருகன்கல்விநிலையம்; கொடிகாமம் வட்டம், புகையிரத நிலைய அருகாமை அருணாபுரம்; மந்துவில் சின்னச் சந்தையடி. அல்லாரை தெற்கு. தவம் கல்வி நிலையம், வடலரணி கல்வி நிலையம்; சாவகச்சேரி வட்டம்; மணம் குணாய் பிள்ளையார் கோவில் முன்பாக, கோயில் குடியிருப்பு சரசாலை வடக்கு, கெருடாவில். மட்டுவில் தெற்கு. தும்புத் தொழில்வர்த்தகர் சங்கம் வகுப்புத் தொழிலாளர்சங்கம், மீசாலைமேற்கு. கலைமகள் கல்வி நிலையம் அருண் கல்விநிலையம், யுபீற்றர் கல்விநிலையம், கைதடி வட்டம், கைதடிச் சந்திக்கு அருகாமையில்கைதடி வடக்கு சிற்றூர், உதய சூரியன் ச.ச நி, கைதடி வடக்கு மாதர் சங்கம், நியூட்டன் கல்வி நிலையம், ஒஸ்போட் கல்வி நிலையம், தீவக கோட்டம். நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல் ஊர்காவ

யரசன் குடியிருப்பு.

## சிரமதானம்

சிரமதானப் பணிகள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறும் சங்கானை வட்டத்தில் சுழிபுரம் முகாம் சுத்தம் செய்தல்; உடுவில்/தெல்லிப்பழை வட்டம், ஏழாலை வைத்திய சாலை துப்புரவு, ச.ச. நிலையம், நல்லூர் வட்டம், கொண்டலடி ச.ச.நி வீதி துப்புரவு, ச.ச.நி அங்கத்தவர், கரவெட்டி வட்டம் கரவெட்டி தெற்கு மாதிரி கிராமம் துப்புரவு, திருமகள் ச.ச. நிலையம், பருத்தித்துறை வட்டம் அல்வாய் வடக்கு பாடசாலை சுற்றாடல் துப்புரவு, கலைமகள் ச.ச.நி. இளங்கோ ச.ச நி, பொதுமக்கள், மாணவர், தீவகக்கோட்டம் முஸ்லிம் பகுதி துப்புரவு, யாழ் வட்டம் முஸ்லிம் பகுதி நாவலர் வீதி, ஆசாத் வீதி துப்புரவு, உடுப்பிட்டி வட்டம் கொத்தியகாடு பொதுச் சந்தை துப்புரவு, அம்பிகை ச.ச.நி. பொது மக்கள்.

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## சுப்பிரமணியம் அன்னம்மா

[கடைக்கார சின்னப்புவின் மகள்]

காரைநகர் மலிகையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கடைக்கார சின்னப்பரின் மூத்தமகளும், காலம் சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியுமாகிய அன்னம்மா 17-9-93 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் தவமணியின் அன்புத்தாயாரும், காரைநகர் வலவிலிப்பிட்டி தெய்வநாயகம்பிள்ளையின் அருமை மாமியும், பொன்னம்பலம், சண்முகரத்தினம், நகுலேஸ்வரன், சரஸ்வதி, குகபரன், நாகேஸ்வரி [ஆயம்], மீனாம்பிகை ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தர்சிகா, சஜனின் அன்பு பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [17-9-93] 19/1, B A தம்பி லேனில் நடைபெற்றது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

19/1, B A தம்பி லேன், ஒட்டுமடம். — தகவல்: தெய்வநாயகம்பிள்ளை குடும்பத்தினர்.

[சி-7444]

## முருகேசு பகீரதன்

(ஹாட்லி கல்லூரி பழைய மாணவன்)

கதிரவேற்பிள்ளை வீதி தம்பசிட்டியைச் சேர்ந்த (வடமராட்சி விவாக பிறப்பு இறப்பு பதிவாளர்) முருகேசு சிவநேசம் தம்பதிகளின் புதல்வன் மு. பகீரதன் காலமாகி விட்டார்.

இவர் மு தயாபரன், மு வானதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார், அன்னாரது பூதவுடல் இன்று (18-09-93) பருத்தித்துறையில் காலை 10 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், சாரணர், செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள், பரியோவான் முதலுதவி அங்கத்தவர்கள் பலரும் ஏற்றுக் கொள்ளவும்.

ச. முருகேசு

(சி/7445)